# 2026 GROUP – II & IIA
# State Level Mock Test
# General Tamil Explanations

1. **விடை : C**

**இரு வினைகளின் பொருள் வேறுபாடு:**

- கயிறு பிணைக்கப்பட்டது; தச்சன் கயிற்றைப் பிணைந்தான்.
- துணி அழுக்கு நீங்கி வெளுத்தது; சலவைக்காரர் துணியை வெளுத்தார்.
- வலை நீரில் விரிந்தது; மீனவன் வலையை விரித்தான்.
- அறிவு தம்பிக்கு வளர்ந்தது; ஆசிரியர் அறிவை வளர்த்தார்

2. **விடை : B**

**I.** **பழம்பால் - பண்புத்தொகை:** பழைமை + பால் எனப் பிரிந்து, 'மை' விகுதியும் பண்பு உருபும் மறைந்து வருவதால் இது பண்புத்தொகையாகும்

**II.** **பழம் பால் - உம்மைத்தொகை:** 'பழமும் பாலும்' என 'உம்' என்ற விகுதி மறைந்து பொருள் தருகிறது. எனவே இது உம்மைத்தொகை.

**III.** **பால் பழம் - உம்மைத்தொகை:** 'பாலும் பழமும்' என 'உம்' மறைந்து வருவதால் உம்மைத்தொகை ஆகும்.

**IV.** **''பால்பழம் என்பது உவமைத்தொகை** (பால் போன்ற பழம் - பால் போன்ற வெண்மையான பழம்)

3. **விடை : B**

**எதிர்மறை வாக்கியம்:**

- எ.கா: மனிதனால் முடியாதது ஒன்றுமில்லை
- ஒரு தொடரில் செயல் அல்லது தொழில் நிகழாததை அல்லது இல்லாததைக் குறிக்கும் வாக்கியம் எதிர்மறை வாக்கியம் எனப்படும்.
- இந்த வாக்கியத்தில் "முடியாதது", "ஒன்றுமில்லை" போன்ற எதிர்மறைச் சொற்கள் வெளிப்படையாக வந்துள்ளதால், இது எதிர்மறை வாக்கியம்.

4. **விடை : B**

- மன வளர்ச்சி குன்றியோரை பாதுகாத்துப் பராமரிக்கும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டமானது மாற்றுத்திறனாளிகள் நலத்துறை துறையின் கீழ் வழங்கப்படுகிறது.

5. **விடை : C**

- சன்னம் – சிறுமை
- சண்ணம் – ஒரு வகை வாத்தியம்
- நேரி – ஒரு வகை யாழ்
- நேறி – முறைமை

SHANKAR IAS ACADEMY

6. **விடை : C**

**நாலடியார்:**

இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்
எம்மை உலகத்தும் யாம்காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து.

**பொருள்:**

- கல்வி இவ்வுலக இன்பத்தைத் தரும்; பிறருக்குக் கொடுப்பதால் குறையாது;
- கற்றவரின் புகழை எங்கும் பரவச் செய்யும்; அவர் உயிரோடு இருக்கும் வரை அழியாது.
- ஆதலால், எந்த உலகத்திலும் கல்வியைப் போல அறியாமை ஆகிய மயக்கத்தைப் போக்கும் சிறந்த மருந்தை நாம் கண்டதில்லை.

7. **விடை : D**

**உ.வே.சா:**

- 'புலமைப் பெருங்கடல்' என அழைக்கப்பட்டார்.
- சென்னை பல்கலைக்கழகத்தால் 'டாக்டர்' பட்டம் பெற்றவர்.
- தன் வாழ்க்கை வரலாற்றை 'என் சரிதம்' என்னும் பெயரில் தொடராக எழுதினார்.
- குறிஞ்சிப்பாட்டில் இடம்பெற்ற தொண்ணூற்று ஒன்பது பூக்களின் பெயர்களைத் தேடி அச்சிட்டார்.

'தமிழ்த் தாத்தா' என அழைக்கப்பெற்ற உ.வே.சா. இணையற்ற ஆசிரியர்; புலமைப் பெருங்கடல்; சிறந்த எழுத்தாளர்; பதிப்பாசிரியர்; பழந்தமிழ் இலக்கியங்களைத் தேடித்தேடி அச்சில் பதிப்பிக்க அரும்பாடுபட்டவர். 'மகாமகோபாத்தியாய', 'திராவிட வித்தியா பூஷணம்', 'தாக்ஷிணாத்திய கலாநிதி' உள்ளிட்ட பட்டங்களைப் பெற்றுள்ளவர்; கும்பகோணம் அரசு கலைக்கல்லூரியிலும் சென்னை மாநிலக் கல்லூரியிலும் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றியவர். 1932இல் சென்னைப் பல்கலைக்கழகத்தினால், 'டாக்டர்' பட்டம் பெற்ற பெருமைக்குரியவர். அவரது திருவுருவச் சிலை, சென்னை மாநிலக் கல்லூரியில் நிறுவப்பட்டுள்ளது. சென்னையில் திருவான்மியூரில் இவர் பெயரால் நூலகம் அமைந்துள்ளது.

8. **விடை : C**

**விருத்தி சந்தி**

ஏகாரம் வந்தால் இரண்டும் சேர்ந்து (அ + ஏ = ஐ) ஐ என்று

1. நிலைமொழி ஈற்றில் அகரம் இருந்து வருமொழி முதலில் ஆகும்.
   பரம + ஏகாந்தி = பரமைகாந்தி
2. அ + ஐ = ஐ
   சர்வ + ஐஸ்வர்யம் = சர்வைஸ்வர்யம்
3. ஆ + ஏ = ஐ

   தேவதா + ஏகத்வம் = தேவதைகத்வம்

9. **விடை : C**

"தேம்பாவணி, காவலூர்க்கலம்பகம் கதம்ப மாலையாகக் காட்சியளிக்கின்றது; தொன்னூல் பொன் நூலாக இலங்குகின்றது; சதுரகராதி முத்தாரமாக மிளிர்கின்றது; வீரமாமுனிவர் தமிழ் முனிவர்களுள் ஒருவராக விளங்குகின்றார்" எனச் சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை வீரமாமுனிவருக்குப் புகழாரம் சூட்டினார்.

SHANKAR IAS ACADEMY

10. **விடை : B**

**குறள்:**

ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு

**பொருள்:**

- அயலாரின் குற்றங்களை ஆராய்ந்து பார்ப்பது போலத் தன் குற்றங்களையும் காண வல்லவராக ஒருவர் விளங்கினால், நிலைபெற்ற அந்த உயிருக்கு எந்த ஒரு தீமையும் அல்லது துன்பமும் உண்டாகாது.

11. **விடை : B**

- பண்புப்பெயருக்கும், அது தழுவி நிற்கும் பெயர்ச்சொல்லுக்கும் இடையில் 'மை' என்னும் பண்பு விகுதியும் 'ஆகிய', 'ஆன' என்னும் பண்பு உருபுகளும் மறைந்து (தொக்கி) வருவது ஆகும்.

பண்பு உருபு சொல்லாக வரும். ஆகிய, ஆன என்ற இரண்டும் பண்பு உருபுகள்.

1. வண்ணம், 2. குணம், 3. அளவு, 4. வடிவம், 5. சுவை என்பன பண்புகளாகும்.

| | | |
|---|---|---|
| 1. வண்ணப் பண்புத்தொகை | – | செந்தாமரை, கருங்குதிரை |
| 2. குணப்பண்புத்தொகை | – | வெந்நீர், நன்னூல் |
| 3. அளவுப் பண்புத்தொகை | – | முத்தமிழ், ஐந்திலக்கணம் |
| 4. வடிவப் பண்புத்தொகை | – | வட்டப்பலகை, சதுரக்கல் |
| 5. சுவைப் பண்புத்தொகை | – | இன்சொல், துவர்க்காய் |

12. **விடை : D**

| | | |
|---|---|---|
| (A) மாப்பிள்ளை போல | – | கவனிப்பு / உபசரிப்பு |
| (B) வேம்பும் அரசும் போல | – | முரணானாலும் இணைந்து வாழ்தல் |
| (C) மரமேற்றின வண்டி போல | – | மிகுந்த சுமை |
| (D) பொன் வண்டு போல | – | சுறுசுறுப்பு / அழகு |

13. **விடை : B**

**தெ.பொ.மீ**

- இருபதாம் நூற்றாண்டின் மிகச்சிறந்த தமிழாராய்ச்சி முன்னோடிகளில் ஒருவராகக் கருதப்படுகிறார்.
- அறிவுச் செழுமை மற்றும் பன்மொழிப் புலமைக்காக அறிஞர்களால் 'நடமாடும் பல்கலைக்கழகம்' என்று போற்றப்பட்டார்.
- தமிழறிஞர் திரு. வி. கலியாணசுந்தரனாரால் "மீனாட்சி சுந்தரன் ஒரு அறிவுக்கடல்" என்று பாராட்டப்பட்டவர்.

14. **விடை : B**

**குறள்:**

நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள்.

**பொருள்:**

பிறரோடு கலந்து பழகி மகிழ முடியாதவர்க்கு, மிகப் பெரிய இந்த உலகம் ஒளியுள்ள பகற் காலத்திலும் இருளில் கிடப்பதாம்.

SHANKAR IAS ACADEMY

15. **விடை : D**

**எதிர்ச்சொல்:**

- தேக்குதல் × நீக்குதல்
- அகலுதல் × கிட்டுதல்
- வளைதல் × நிமிர்தல்
- நோதல் × தணிதல்

16. **விடை : B**

- வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
  தொகையறிந்து தூய்மை யவர்.
- இக்குறள் இடம்பெற்றுள்ள அதிகாரம் : அவையஞ்சாமை

17. **விடை : B**

**நாமக்கல் கவிஞர்:**

- மலைக்கள்ளன்
- அவளும் அவனும் [அவனும் அவளும் அல்ல]
- சங்கொலி
- இலக்கிய இன்பம்

18. **விடை : C**

- ஆவியாதல் – Evaporation
- தெளியவைத்து இறுத்தல் – Decantation
- ஆவி சுருங்குதல் – Condensation
- வடிகட்டுதல் – Filtration

19. **விடை : A**

- நன்றாய்ப் பேசினான் - ஆக, ஆய், என என்று முடியும் வினையெச்சங்களின் முன் வல்லினம் மிகல்
- தின்று தீர்த்தான் - மென் தொடர் குற்றியலுகரம் பின் வல்லினம் மிகாது.

20. **விடை : B**

- Curriculum – கலைத்திட்டம்
- Certificate – சான்றிதழ்
- Syllabus – பாடத்திட்டம்
- Assignment – ஒப்படைப்பு
- Dissertation – ஆய்வேடு / ஆய்வுக்கட்டுரை

21. **விடை : C**

**பழமொழி நானூறு:**

நிலத்தின் மிகையாம் பெருஞ்செல்வம் வேண்டி
நலத்தகு வேந்தருள் நல்லாரைச் சார்ந்து
நிலத்து நிலை கொள்ளாக் காலரே, காணின்
'உலக்கை மேல் காக்கை' என்பர்.

**பொருள்:**



SHANKAR IAS ACADEMY

- இந்த உலகத்திலே, அளவுக்கு அதிகமான பெருஞ் செல்வத்தை விரும்புகிறவர்கள் சிலர், அவர்கள், நலத்தின் தகுதிகளால் மேம்பட்ட அரசர்களுள், நல்லவர்களைச் சார்ந்து அதனை ஈட்ட நினைப்பர்.
- எனினும், அவர்களைச் சென்று சார்ந்ததும் நிலைகொள்ளாத காலினவராகத் தருக்கி, ஏதும் அடையாதே கெடுவர்.
- ஆராய்ந்து பார்த்தால், இத்தகையவரே உலக்கையின்மேலே இருக்க முயலும் காக்கை என்று சொல்லப்படுபவராவர்.

22. **விடை : A**

| **மரபுத்தொடர்** | | **பொருள்** |
|---|---|---|
| நெக்குருகுதல் | – | இளகுதல் |
| நூல்போதல் | – | விதவையாதல் |
| நாள் தள்ளுதல் | – | காலம் கழித்தல் |
| நாளோட்டுதல் | – | காலந்தாழ்த்தல் |

23. **விடை : D**

- Ziggurat – கோவில் கோபுரம்
- Cuneiform – கியூனிபார்ம் (ஆப்பு வடிவ எழுத்துமுறை)
- Papyrus – பாப்பிரஸ் (தாவரத் தாள்)
- Dynasty – வம்சம் / அரசகுலம்

24. **விடை : D**

வெள்ளையப்பன் - வெள்ளி நாணயம்
வெள்ளையுஞ்சள்ளையும் - வெண்மையான உடை
வெள்ளை வேட்டிக்காரன் - மாசற்ற ஆடையணிந்து சோம்பேறியாக இருப்பவன்

25. **விடை : B**

| | |
|---|---|
| மூ | மூப்பு, மூன்று, மூவேந்தர், அழிவுறு |
| மே | மேம்பாடு, அன்பு, விருப்பம், மேன்மை |
| மை | கண்மை, குற்றம், இருள், எழு, கருப்பு, செம்மறி ஆடு, நீர், மலடி, மேகம், தீவினை, மதி, மந்திரமை, வண்டினம், கலங்கம், பசுமை, பாவம், அழுக்கு, இளமை, களங்கம், அஞ்சனம் |
| ம | இமயன், மந்திரம், காலம், சந்திரன், சிவன், நஞ்சு, நேரம், அசோகமரம், எமன், பிரம்மன் |

26. **விடை : C**

**பிஞ்சு வகை**

தாவரத்தின் பிஞ்சு வகைகளுக்கு வழங்கும் சொற்கள்.

பூம்பிஞ்சு: பூவோடு கூடிய இளம்பிஞ்சு; பிஞ்சு: இளம் காய்; வடு: மாம்பிஞ்சு; மூசு: பலாப்பிஞ்சு; கவ்வை: எள்பிஞ்சு; குரும்பை: தென்னை, பனை முதலியவற்றின் இளம் பிஞ்சு; முட்டுக் குரும்பை: சிறு குரும்பை; இளநீர்: முற்றாத தேங்காய்; நுழாய்: இளம்பாக்கு; கருக்கல்: இளநெல்; கச்சல்: வாழைப்பிஞ்சு.

**குலை வகை**

தாவரங்களின் குலை வகைகளைக் குறிப்பதற்கான (காய்களையோ கனிகளையோ) சொற்கள்:

SHANKAR IAS ACADEMY

கொத்து: அவரை, துவரை முதலியவற்றின் குலை; குலை: கொடி முந்திரி போன்றவற்றின் குலை; தாறு: வாழைக் குலை; கதிர்: கேழ்வரகு, சோளம் முதலியவற்றின் கதிர்; அலகு அல்லது குரல்: நெல், தினை முதலியவற்றின் கதிர்; சீப்பு: வாழைத்தாற்றின் பகுதி.

**கொழுந்து வகை.**

தாவரத்தின் நுனிப்பகுதிகளைக் குறிக்கும் சொற்கள்.

துளிர் அல்லது தளிர்: நெல், புல் முதலியவற்றின் கொழுந்து; முறி அல்லது கொழுந்து: புளி, வேம்பு முதலியவற்றின் கொழுந்து; குருத்து: சோளம், கரும்பு, தென்னை, பனை முதலியவற்றின் கொழுந்து; கொழுந்தாடை: கரும்பின் நுனிப்பகுதி.

27. **விடை : B**

- இஃது, ஓர் - உயிர் எழுத்துக்கு முன் இடம்பெறும்
- இது, ஒரு - உயிர்மெய் எழுத்துக்கு முன் இடம்பெறும்

28. **விடை : A**

**ஒரு பொருள் தரும் இரு சொல்:**

| | |
|---|---|
| திரை | கடல் அலை, திரைச்சீலை, மேக மூட்டம் |
| பறவை | புள் (பறக்கும் உயிரி), கடல் (பரவை) |
| விலங்கு | மிருகம், தளை (கைவிலங்கு), நீங்குதல் |
| திண்மை | வலிமை, மன உறுதி |
| மை | அஞ்சனம், கருமை, மேகம் |

29. **விடை : B**

**சொல் பொருள்**

- பிசியே – விடுகதை
- தூவல் – மேகம்
- மிரியல் – மிளகு
- அதசி – சணல்

30. **விடை : C**

சரியான அகர வரிசைச் சொற்கள்:

- தேக்கம், தேங்காய், பச்சை, மஞ்ஞை, வட்டம்

31. **விடை : C**

- Verdict – தீர்ப்பு
- Plaintiff – வாதி
- Witness – சாட்சி
- Evidence – ஆதாரம்

32. **விடை : B**

**எழுத்தின் பெயர்க் காரணம்**

- முத்திற்கு ஒலி வடிவம், வரி வடிவம் என இரு வடிவங்கள் உள்ளன. ஒலி வடிவம் மாறாதது. வரிவடிவம் கால ஓட்டத்தில் மாறக்கூடியது.

SHANKAR IAS ACADEMY

**எழுத்திலக்கணத்தின் வகைகள்**

1. எண்
2. பெயர்
3. முறை
4. பிறப்பு
5. உருவம்
6. மாத்திரை
7. மொழிமுதல் எழுத்துகள்
8. மொழி இறுதி எழுத்துகள்
9. இடைநிலை எழுத்துகள் (அ) மெய்ம்மயக்கம்
10. போலி
11. பதம்
12. புணர்ச்சி

எனப் பன்னிரண்டு வகையாக்கிப் பவணந்தி முனிவர் எழுத்தின் இலக்கணத்தைக் கூறியுள்ளார்.

33. **விடை : C**

- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களான 'நான்மணிக்கடிகை, முதுமொழிக்காஞ்சி, ஆசாரக்கோவை' ஆகிய மூன்றையும் 'மணிமொழிக்கோவை' என்பர்

**நான்மணிக்கடிகை:**

- கள்வர்களுக்கும் செல்வத்தைத் திருடு போகாது காப்பவனுக்கும் தூக்கம் இல்லை என்கிறது நான்மணிக்கடிகை

**பாடல் அடிகள்:**

"கள்ளர்க்கும் துயில் இல்லை; காதலித்துத் தங்(கு)உடம்பை
கொள்ளர்க்கும் துயில் இல்லை; கூர்தீர்ந்தார் தம்மினும்
உள்ளர்க்கும் துயில் இல்லை; ஒண்பொருள் வைத்தார்க்கும்
தள்ளர்க்கும் துயில் இல்லை, தான்."

34. **விடை : A**

**இடக்கரடக்கல்:**

- பிறரிடம் வெளிப்படையாகச் சொல்லத் தயக்கமான அல்லது நாகரிகமற்ற சொற்களுக்குப் பதிலாக வேறு நல்ல சொற்களைப் பயன்படுத்துவது.

எ.கா: செம்முகக்கிரங்கு

செம்முகக்குரங்கு முகம் என்பது இடக்கர் அடக்காம் வந்து குரங்கின் குறியைக் குறித்தது.

**மங்கலம்:**

- அமங்கலமான சொற்களை நேரடியாகக் கூறாமல், மங்கலமான சொற்களால் குறிப்பிடுவது.

எ.கா: நல்ல பாம்பு

- கடித்தால் உடனே சாவு வரும் அத்தகைய கொடிய பாம்பு - நல்ல பாம்பு

**குழூஉக்குறி:**

- ஒரு குறிப்பிட்ட குழுவைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் புரியும் வகையில் பயன்படுத்தப்படும் குறியீட்டுச் சொற்கள்.

எ.கா: காந்தி கணக்கு

- காந்தி கணக்கு (திரும்ப வராத பணம்), ஒரு காந்தி (500 ரூபாய்) தந்தால் வேலை முடியும்.



SHANKAR IAS ACADEMY

35. **விடை : C**

**இன்னா நாற்பது:**

- ஆசிரியர்: கபிலர்
- இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று
- 164 இன்னாத செயல்களைத் தொகுத்துக் கூறுகிறது
- குடும்ப உறுப்பினர்களுக்குத் துன்பம் தருவன எவையெவை என்று கூறுகிறது
- ‘இன்னா’ என்னும் சொல்லுக்குத் துன்பம் தருபவை அல்லது தீமை தருபவை என்பது பொருளாகும்.

36. **விடை : A**

ஒரு, இரு போன்றன முற்றியலுகர ஈற்று எண்ணுப் பெயர்கள் இயல்பாகப் புணரும்.

ஒரு + கடை = ஒருகடை

இரு + பக்கம் = இருபக்கம்

ஏழு + கடல் = ஏழுகடல்

37. **விடை : C**

**பாவேந்தர்,**

**“ஆடவரின் காதலுக்கும் பெண்கள் கூட்டம்**
**அடைகின்ற காதலுக்கும் மாற்ற முண்டோ?**
**பேடகன்ற அன்றிலைப் போல் மனைவி செத்தால்**
**பெருங்கிழவன் காதல்செயப் பெண்கேட் கின்றான்**
**வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்**
**மணவாளன் இறந்தால்பின் மணத்தல் தீதோ?**
**பாடாத தேனீக்கள் உலவாத் தென்றல்**
**பசியாத நல்வயிறு பார்த்த துண்டோ?”**
**எனக் கேட்கிறார் பாவேந்தர்.**

- விதவையர் மணந்து கொள்வதைத் தடுத்தல் கூடாது என்று வலியுறுத்துகின்றார். ஆண்களுக்கு உள்ள உணர்வுகளே பெண்களுக்கும் இருக்கும். அதனால் கைம்பெண்களின் மணத்தை எதிர்க்கக் கூடாது என்றும் பாவேந்தர் எடுத்துரைக்கின்றார்.

38. **விடை : A**

- Petrol - எரிநெய்
- Fuel – எரிப்பொருள்

39. **விடை : C**

**சொற்களை இணைத்துப் புதிய சொல் உருவாக்குதல்:**

ஒரு விஷயத்தைப் பற்றி கவனமாக சிந்திக்க வேண்டும், இதனால் நீங்கள் அதைப் பற்றி ஒரு முடிவை எடுக்க முடியும்

40. **விடை : B**

சி. இலக்குவனார் **:**

- “தமிழ் என்பது ஒரு மொழி மட்டுமல்ல, அது தமிழர்களின் உயிர்” என்ற கொள்கையுடன் வாழ்ந்தவர்.

SHANKAR IAS ACADEMY

- தமிழுக்காகப் பலமுறை சிறை சென்றதால் இவரைத் ‘தமிழ்ப்போராளி’ என்று அழைக்கிறோம்.
- “எங்கும் தமிழ், எதிலும் தமிழ்” என்னும் முழக்கத்தை முன்னெடுத்தவர். தமிழக அரசு அலுவலகங்களிலும் பள்ளிகளிலும் தமிழ் கட்டாயமாக்கப்பட வேண்டும் என்று போராடினார்.
- ‘குறள் நெறி’ என்னும் இதழைத் தொடங்கி, திருக்குறளின் அறக்கருத்துக்களை மக்களிடையே கொண்டு சேர்த்தார்.

41. **விடை : C**

குறில் - நெடில் வேறுபாடு

| | |
|---|---|
| அரி | விஷ்ணு, சிங்கம், நெல், அரித்தல், பகைவன், வெட்டுதல், திருமால், காற்று, பொன், தவளை, அழகு, ஒரு நிறம், இந்திரன், குரங்கு. |
| ஆரி | அரியவள், ஒரு வகை மரம், அருமை உடையவள், உயர்ந்தவள், தட்டுப்படுபவள். |

42. **விடை : C**

- Ritual – சடங்கு
- Religion - சமயம்
- Festival – திருவிழா
- Prayer – வழிபாடு

43. **விடை : C**

- தாகூர் தம் இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்ற ஆண்டு: 1913

44. **விடை : C**

- ஆங்கிலேய அரசைக் கண்டித்து அவர்கள் வழங்கிய ‘சர்’ பட்டத்தைத் திருப்பி அளிக்க காரணமான நிகழ்வு: ஜாலியன்வாலாபாக் படுகொலை

45. **விடை : A**

- தாகூர் அனைவராலும் அன்புடன் குருதேவ் என்று அழைக்கப்பட்டார்.

46. **விடை : D**

- ‘அமர் சோனார் பங்களா’ என்னும் பாடல் வங்காள நாட்டின் நாட்டுப் பண்ணாக பாடப்பட்டு வருகின்றது.

47. **விடை : C**

- சாகித்திய அகாதெமி வெளியிட்டுள்ள ‘தாகூரின் கடிதங்கள்’ என்னும் நூலைத் தமிழில் மொழியாக்கம் செய்தவர் த.நா. குமாரசுவாமி.
- அவர் தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, வங்கம், பாலி, ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்தவர்.

48. **விடை : D**

தமிழ் என்ற சொல் வருமொழியோடு புணரும்போது இடையில்
'அ' என்ற சாரியை வரும்.

தமிழ் + கூத்து → தமிழ் + அ + கூத்து = தமிழக்கூத்து

தமிழ் + நாடகம் → தமிழ் + அ + நாடகம் = தமிழநாடகம்

SHANKAR IAS ACADEMY

தமிழ் + வளர்ச்சி → தமிழ் + அ + வளர்ச்சி = தமிழவளர்ச்சி
தமிழ் + அரசர் → தமிழ் + அ + அரசர் = தமிழவரசர்

இவை இன்று வழக்கில் இல்லை.
தமிழ் + சுவை = தமிழ்ச்சுவை
தமிழ் + நாடு = தமிழ்நாடு
தமிழ் + வளம் = தமிழ்வளம்
தமிழ் + அரசர் = தமிழரசர்
என வருவது இன்றைய வழக்கு.
“தமிழ் அவ்உறவும் பெறும் வேற்று மைக்கே”
- நன்னூல் 225

49. **விடை : A**

- Simulation – பாவனை
- Server – சேவையகம்
- Firewall – தீயரணல்
- Resolution – தெளிவுத்திறன்

50. **விடை : B**

A) **உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை**
**நில்லாது நீங்கி விடும்.**

**பொருள்:**

- ஒருவர்க்கு ஊக்கமுடைமையே நிலையான உடைமையாகும், மற்றப் பொருளுடைமையானது நிலைபேறு இல்லாமல் நீங்கிவிடுவதாகும்.

B) **உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது**
**தள்ளினுந் தள்ளாமை நீர்த்து.**

**பொருள்:**

- எண்ணுவதெல்லாம் உயர்வைப்பற்றியே எண்ண வேண்டும், அவ்வுயர்வுக் கைகூடாவிட்டாலும் அவ்வாறு எண்ணுவதை விடக்கூடாது.

C) **பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை**
**வெரூஉம் புலிதாக் குறின்.**

**பொருள்:**

- யானை பருத்த உடம்பை உடையது; கூர்மையான கொம்புகளை உடையது; ஆயினும் ஊக்கமுள்ளதாகிய புலி தாக்கினால் அதற்கு அஞ்சும்.

D) **ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா**
**ஊக்க முடையா னுழை.**

**பொருள் :**

- சோர்வு இல்லாத ஊக்கம் உடையவனிடத்தில் ஆக்கமானது தானே அவன் உள்ள இடத்திற்கு வழிக் கேட்டுக்கொண்டு போய்ச் சேரும்.

SHANKAR IAS ACADEMY

51. **விடை : C**

| | |
|---|---|
| மான் | கன்று/குட்டி |
| யானை | கன்று |
| ஒட்டகம் | கன்று |
| நீர்யானை | கன்று |
| நண்டு | பிள்ளை |

52. **விடை : D**

சில இடங்களில் ஒரே பொருளை உணர்த்தக்கூடிய வேறு வேறு சொற்கள் பிரியாமல், அடுத்தடுத்து சேர்ந்தே வருவதும் உண்டு. அது ஒருபொருட் பன்மொழி எனப்படுகிறது. பிரித்து தனித்தனியாக வந்தாலும் பொருள்தரும்.

- பக்கத்தின் நடுமையத்தில் புள்ளி வை – நடுவில் புள்ளி வை, மையத்தில் புள்ளி வை
- அங்கிருக்கும் மூட்டைமுடிச்சுகளை வண்டியில் ஏற்று – மூட்டை, முடிச்சு
- மாட்டை போஸ்ட் கம்பத்தில் கட்டாதே – போஸ்ட் (post), கம்பம்
- அந்த மூலைடேனிங்கில் கடை இருக்கிறது – மூலை, ட்டேன் (turn)
- நடு சென்டரில் குத்து – நடு, சென்டர்
- கண்ணாடி கிளாசில் டீ குடித்தேன்

53. **விடை : C**

பொருள் விளக்கத்திற்காக ஒன்றை இடையில் காட்டுவதற்குப் பயன்படுவது அடைப்புக்குறி (Parenthesis - ( )) அல்லது இருசொற் புணர்ச்சி இடைக்கோடு / விளக்க இடைக்கோடு (Em dash - —) ஆகும்.

தனி இடைகோட்டுக் குறி என்பது பொதுவாக இரு சொற்களை இணைக்க அல்லது சொற்களைப் பிரித்துக் காட்டவே பயன்படுத்தப்படுகிறது.

54. **விடை : A**

கொடுக்கப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்கள் மற்றும் அவற்றின் தமிழ்ப் மொழிபெயர்ப்புகளில் Demonstrate – அழித்தல் என்ற ஒரு இணை மட்டுமே தவறானது.

- Demonstrate என்பதன் சரியான பொருள் விளக்குதல் அல்லது மெய்ப்பித்தல்/செய்து காட்டுதல் ஆகும்.

மற்ற அனைத்து இணைகளும் சரியாகப் பொருந்தியுள்ளன:

- Dictate – கட்டளையிடுதல் (சரி)
- Dialect – வட்டார மொழி (சரி)
- Hoarding – பதுக்கல் (சரி)

55. **விடை : A**

- **ஆசுகவி**: நினைத்தவுடன் அல்லது "பாடு" எனக் கேட்டவுடன், கொடுத்த பொருளில் விரைவாக கவிபாடும் திறன் பெற்றவர் ஆசுகவி ஆவார்.
- **மதுரகவி**: செவிக்கினிய ஓசைநலம் சிறக்க, இனிமையாகப் பாடுபவர் மதுரகவி ஆவார்.
- **சித்திரகவி**: மாலை மாற்று, நாகபந்தம் போன்ற ஓவிய அமைப்புகளில் பாடுபவர் சித்திரகவி ஆவார்.
- **வித்தாரகவி**: பல்வேறு பொருள்களை விரிவாகவும் நூல்களாகவும் பலதரப்பட்ட பாவினங்களில் பாடுபவர் வித்தாரகவி ஆவார்



SHANKAR IAS ACADEMY

56. **விடை : B**

- **கூற்று விளக்கம்**: "அந்தப் பள்ளி சிறந்த பள்ளி" என்பதில் 'அந்த' என்ற சொல் ஏற்கனவே நாம் அறிந்து வைத்துள்ள ஒரு குறிப்பிட்ட பள்ளியைக் குறித்து வருகிறது.
- **காரணம் விளக்கம்**: இலக்கணப்படி, நாம் ஏற்கனவே அறிந்து வைத்துள்ள (பழங்காலத்திலிருந்தே தெரிந்த அல்லது முன்பே அறிந்த) ஒன்றைச் சுட்டிக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் சுட்டுச்சொல் பண்டறி சுட்டு (பழமை + அறி + சுட்டு) எனப்படும்.

எனவே, கூற்றும் சரியானது, அதற்கான காரணமும் சரியானது ஆகும்.

57. **விடை : B**

காளி தாசனின் தேனிசைப் பாடல்கள்
காவிரிக் கரையில் எதிரொலிக்க
கம்பனின் அமுதக் கவிதை களுக்குக்
கங்கை அலைகள் இசையமைக்க (புதுமைகள்)

கன்னிக் குமரியின் கூந்த லுக்காகக்
காஷ்மீர்த் தோட்டம் பூத்தொடுக்கும்!
மேற்கு மலைகள் நதிகளை அனுப்பிக்
கிழக்குக் கரையின் நலம்கேட்கும்! (புதுமைகள்)

58. **விடை : C**

- முருகன் அடங்கினான் – தன்வினை.
- மாலாவை வருவி – பிறவினை
- கவிதா கற்றாள் – தன்வினை

59. **விடை : C**

- யார் கவிஞன்?' என்னும் தனது புகழ்பெற்ற கவிதையின் வாயிலாகக் கவிஞனுக்குரிய இலக்கணத்தை வகுத்தவர் கவிஞர் முடியரசன் ஆவார்.
- இவருக்கு குன்றக்குடி அடிகளாரால் '**கவியரசு**' என்னும் பட்டம் வழங்கப்பட்டது (1966).
- மேலும் இவர் பேரறிஞர் அண்ணாவால் 'திராவிட நாட்டின் வானம்பாடி' என்றும் பாராட்டப்பட்டவர் ஆவார்.

60. **விடை : A**

- (B) ஓலைக்குடிசை - இது ஓலையினால் ஆகிய குடிசை (மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை) ஆகும். இருபெயரொட்டுப் பண்புத்தொகை அல்ல.
- (C) அறுபது - இது ஒரு எண்ணுப்பெயர் ஆகும். வினைத்தொகை அல்ல.
- (D) சுடுகாடு - இது சுடுகின்ற காடு, சுட்ட காடு, சுடும் காடு என முக்காலத்திற்கும் பொருந்துவதால் வினைத்தொகை ஆகும்.

61. **விடை : D**

- (i) தேன் + சிறப்பு = தேன்சிறப்பு.
- (ii) தேன் + மொழி = தேமொழி.
- (iii) தேன் + குடம் = தேங்குடம்
- (iv) தேன் + குழம்பு = தேக்குழம்பு

SHANKAR IAS ACADEMY

62. **விடை : C**

- **குறிப்பு வினையாலணையும் பெயர்:** ஒரு வினையை அடிப்படையாகக் கொள்ளாமல், பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகிய ஆறன் அடிப்படையில் தோன்றி, காலத்தை வெளிப்படையாகக் காட்டாமல் குறிப்பாக உணர்த்தி வரும் பெயர் குறிப்பு வினையாலணையும் பெயர் ஆகும். இங்குக் 'நன்மை' என்னும் பண்பைக் குறிப்பால் உணர்த்தி, அப்பண்பினை உடைய ஒருவரைக் குறிப்பதால் நல்லவன் என்பது குறிப்பு வினையாலணையும் பெயர் ஆகும்.

63. **விடை : B**

பனை + காய் → பன் + காய் – ஐகாரம் கெட்டது
பன் + அம் + காய் – 'அம்' சாரியை தோன்றியது
பனங் + காய் – 'ம்' என்பது 'ங்' எனத் திரிந்தது.

64. **விடை : C**

- **கூற்று (சரி):** "திருவாசகம் படித்தேன்" என்பது கருவியாகுபெயர் ஆகும். இங்கே 'திருவாசகம்' என்னும் கருவியின் (சொல்/வாக்கு) பெயர், அதைக் கொண்டு இயற்றப்பட்ட 'நூல்' என்ற காரியத்திற்கு ஆகி வந்துள்ளது.
- **காரணம் (சரி):** வாசகம் என்ற சொல் சொல்லையே (காரணம்) குறிக்கும். அது அதிலிருந்து ஆக்கப்பட்ட நூலாகிய செய்யுளை (காரியம்) உணர்த்தி நின்றதால் இது கருவியாகுபெயர் ஆனது.

65. **விடை : A**

காற்புள்ளி
**விளக்கம்:**

- 'ஆனால்', 'ஆயின்', 'ஆகையால்', 'எனினும்' போன்ற இணைப்புச் சொற்களை அடுத்து வாக்கியத்தில் காற்புள்ளி (,) இடப்படும்.

66. **விடை : B**

- வேர்ச்சொல் என்பது ஒரு சொல்லின் அடிச்சொல் அல்லது பகுதி ஆகும். இது வழக்கமாக ஏவல் (கட்டளை) பொருளில் வரும்.
- 'நில்' என்ற கட்டளைச் சொல்லிலிருந்தே நிலை, நின்றான், நின்றாள் போன்ற சொற்கள் உருவாகின்றன

67. **விடை : A**

- கூற்று 1: உயிரெழுத்து (ஆவி) 12 மாத்திரை வரை நீண்டு ஒலிக்கும். (எனவே கூற்று 1 சரி)
- கூற்று 2: மெய்யெழுத்து (ஒற்று) 11 மாத்திரை வரை நீண்டு ஒலிக்கும். (எனவே கூற்று 2 சரி)

68. **விடை : C**

இன்னாத கனி – எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சம்
அருளின்றிக் கூறினான் – எதிர்மறைக் குறிப்பு வினையெச்சம்
நாளின்று போகி – எதிர்மறைக் குறிப்பு முற்றெச்சம் எனக் குறிப்புவினையும் மூவகை எதிர்மறை எச்சமாக மாறுகிறது.

69. **விடை : D**

இத்தொடரில் வந்துள்ள 'தில்' என்பது ஒரு இடைச்சொல் ஆகும்.



SHANKAR IAS ACADEMY

- 'தில்' என்பது விழைவு (விருப்பம்), காலம், ஒழிவசை ஆகிய பொருள்களில் வரும் ஒரு இடைச்சொல்லாகும்.
- குறுந்தொகைப் பாடலில் வரும் "வருகதில் அம்ம எம் சேரிச் சேவற்போத்து" போன்ற தொடர்களில் இது பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கு 'வருகதில்' என்பதில் 'தில்' என்பது இடைச்சொல்லாக நின்று விழைவு (வருக என்று விரும்புதல்) பொருளைத் தருகிறது.

70. **விடை : B**

- (B) அறிஞர் அண்ணாவின் பேச்சே பேச்சு - இது ஒருவருடைய பேச்சாற்றலை வியந்து பாராட்டும் வகையில் அமைந்துள்ளதால் **உணர்ச்சித்தொடர் (உவகை/வியப்பு)** ஆகும்.
- (A) அறிஞர் அண்ணா காஞ்சிபுரத்தில் பிறந்தார் மற்றும் (C) அறிஞர் அண்ணா இறந்துவிட்டார் - இவை செய்தியைத் தெளிவாகத் தெரிவிப்பதால் செய்தித்தொடர்கள் ஆகும்.
- (D) அறிஞர் அண்ணா எங்கு பிறந்தார் - இது வினாவைக் குறிப்பதால் வினாத்தொடர் ஆகும்.

71. **விடை : C**

- (a) இறந்தகாலம் - 3. தோய்தயிர்: தோய்ந்த தயிர் (ஏற்கனவே தோய்ந்த நிலை - இறந்தகாலம்).
- (b) நிகழ்காலம் - 2. ஓடு மீன் ஓட: ஓடுகின்ற மீன் (தற்போது ஓடிக்கொண்டிருக்கும் நிலை - நிகழ்காலம்).
- (c) எதிர்காலம் - 1. தின்பண்டம்: தின்னும் பண்டம் (இனிமேல் தின்னப்போகும் பண்டம் - எதிர்காலம்).
- (d) முக்காலம் - 4. அரிவாள்: அறுத்த, அறுக்கின்ற, அறுக்கும் அரிவாள் என மூன்று காலங்களுக்கும் பொதுவாய் வரும் வினைத்தொகைச் சொல்

72. **விடை : C**

- மூஞ்சி: இது 'மூய்' (முடிவு/நெருங்கிச் சூழ்ந்த இடம்) என்ற தமிழ் வினைவேர்ச் சொல்லிலிருந்து 'மூய்தி' எனத் திரிந்து உருவான தூய தமிழ்ச்சொல்லாகும் (விலங்கு மற்றும் மனித முகத்தைக் குறிக்கப் பண்டைக்காலம் தொட்டே இலக்கியங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது).
- காதி - இந்தி / வடமொழிச் சொல்லாகும்.
- பொத்தான் - போர்த்துகீசிய மொழிச் சொல்லாகும்.
- தளவாடம் - மலையாள மொழிச் சொல்லாகும்

73. **விடை : D**

- PAMPHLET - துண்டு பிரசுரம், துண்டறிக்கை, சிற்றறிக்கை அல்லது சிறுகையேடு.
- பொருள்: குறிப்பிட்ட ஒரு விஷயம், விளம்பரம், அறிவிப்பு அல்லது கல்வித் தகவல் பற்றி மிகச் சில பக்கங்களைக் கொண்ட ஒரு எளிய அச்சு வெளியீடு அல்லது சிறு புத்தகம்

74. **விடை : B**

**மரபு வழுவமைதி**

எந்தப் பொருளை எந்தச் சொல்லால் எந்த முறையில் சான்றோர்கள் சொன்னார்களோ அவ்வாறே சொல்லுதல் மரபு.

எப்பொருள் எச்சொ(ல்)லின் எவ்வாறு உயர்ந்தோர் செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே (நன்னூல் 388)

SHANKAR IAS ACADEMY

1. இயற்பெயரும் சிறப்புப் பெயரும் வரும் முறை : இயற்பெயர் என்பது ஒருவனுக்குத் தாய், தந்தை, உறவினர் வைக்கும் பெயர் ஆகும். சிறப்புப் பெயர் என்பது ஒருவனுக்கு அமைந்த பட்டப் பெயர் ஆகும்.

முதலில் பட்டப்பெயரும் இரண்டாவதாக இயற்பெயரும் வருவதே மரபு.
அறிஞர் அண்ணா, மகாத்மா காந்தி எனவரும். சில இடங்களில் இவை மாறி வருவதும் உண்டு. அவ்வாறு வரின் அது வழுவாகும்.

| **மரபு** | **மரபுவழு** |
|---|---|
| குறத்தி வள்ளி | வள்ளிக்குறத்தி |
| சோழன் ராஜராஜன் | ராஜராஜசோழன் |
| முதலியார் ராமசாமி | ராமசாமி முதலியார் |
| வேல் முருகன் | முருகவேல் |

75. **விடை : B**

'எட்டு', 'பத்து' ஆகிய எண்ணுப்பெயர்களின் பின் வல்லினம் மிகும்.
பதிகம் என்பது **பத்துப் பாடல்களைக்** கொண்டது.

76. **விடை : B**

வீரமாமுனிவர் வாழ்ந்த காலம் 1680–1747. எனவே, அவர் தமிழ் எழுத்துச் சீர்திருத்தங்களை மேற்கொண்டது 18ஆம் நூற்றாண்டில் ஆகும் (13ஆம் நூற்றாண்டில் அல்ல)

77. **விடை : D**

**விளக்கம்:**

- 'கடி' என்ற உரிச்சொல் காவல், கூர்மை, மணம் (வாசனைகள்), ஆர்த்தல் (ஒலித்தல்), அச்சம், சிறப்பு, விரைவு, மிகுதி போன்ற பல்வேறு பொருள்களைத் தரும் பலபொருள் குறித்த ஒருசொல் ஆகும்.

78. **விடை : A**

**(A) ஆண்டு, ஈண்டு - சரி:** ஆண்டு, ஈண்டு, ஆங்கு, ஈங்கு போன்ற சொற்களுக்குப் பின் வல்லினம் (ஒற்று) மிகுந்து வரும் (எ.கா: ஆண்டு + கண்டேன் = ஆண்டுக் கண்டேன்)

79. **விடை : C**

“இகுளை” – தோழி

80. **விடை : D**

- (a) கிண்டி - 2. மராத்தி (கிண்டி என்பது ஒரு வகை பாத்திரம்/செம்பு ஆகும். இது மராத்தி மொழியிலிருந்து வந்த சொல்).
- (b) சால்வை - 3. பாரசீகம்
- (c) குத்தகை - 4. உருது
- (d) முருங்கை - 1. சிங்களம் (முருங்கை என்பது சிங்கள மொழியின் 'முருங்கா' என்ற சொல்லில் இருந்து மருவி வந்தது)

81. **விடை : B**

**உழைக்காமல் உயர முடியுமா** என்பது ஒரு கேள்வி எழுப்பும் வாக்கியமாகும் (வினாத் தொடர்). எனவே, இதன் முடிவில் தான் வினாக்குறி (?) இட வேண்டும்.



SHANKAR IAS ACADEMY

82. **விடை : D**

'signal' என்னும் ஆங்கிலச் சொல்லிற்கு நிகரான தமிழ்ச் சொற்கள் சைகை, அலைவீச்சு, மற்றும் வழிக்குறி ஆகியவையாகும். (அலைவரிசை என்பது 'Channel' என்பதைக் குறிக்கும்).

83. **விடை : A**

ஆங்கிலச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களின் பொருத்தம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:
- (a) Gift – 2. ஆற்றல் (இயற்கைத்திறன் / கொடை)
- (b) Glory – 1. புகழ்
- (c) Digit – 3. விரல்
- (d) Deed – 4. ஆவணம்

இதன்படி, வரிசை முறை 2, 1, 3, 4 என அமைவதால் விருப்பம் (A) சரியானதாகும்.

84. **விடை : C**

- தென்னை மரத்தின் பழைய பெயர் 'தெங்கு' என்பதாகும்.
- 'தெங்கு' என்ற சொல்லுடன் 'காய்' என்ற சொல் புணரும்போது, 'தெங்கு + அம் + காய் = தெங்கங்காய்' என்று (அம் சாரியை பெற்று) வழங்கப்பட்டது.
- பிற்கால இலக்கணமான நன்னூல் விதிப்படி ("தெங்கு நீண்டு ஈற்று உயிர்மெய் கெடும் காய்வரின்") 'தெங்கங்காய்' என்பது 'தேங்காய்' என்று மருவியது.

85. **விடை : D**

**சுட்டெழுத்துகள்:** தமிழில் அ, இ, உ ஆகிய மூன்று எழுத்துகள் மட்டுமே சுட்டெழுத்துகள் ஆகும். இதில் 'உ' சுட்டெழுத்தாக இருந்தாலும், 'ஏ' என்பது வினா மற்றும் தேற்ற (அழுத்த) எழுத்தாகுமே தவிர சுட்டெழுத்து அல்ல. எனவே, 'உ, ஏ ஆகிய இரண்டும் சுட்டெழுத்துகள்' என்ற கூற்று தவறானது.

86. **விடை : B**

- இயேசுகாவியம் என்பது கண்ணதாசன் இயற்றிய ஒரு தற்காலத் தமிழ்க் காப்பியம் (கவிதை நூல்) ஆகும், இது நாடகம் அல்ல. எனவே, இந்த இணை தவறானது.
- மாங்கனி என்பது கண்ணதாசனின் புகழ்பெற்ற நெடுங்கவிதை நூல் ஆகும்.
- தமிழ் மலர் என்பது கண்ணதாசன் நடத்திய இதழ் ஆகும்.
- சேரமான் காதலி என்பது சாகித்திய அகாதமி விருது பெற்ற கண்ணதாசனின் வரலாற்றுப் புதினம் ஆகும்.

87. **விடை : A**

| | |
|---|---|
| தர்மபுரம் | தாம்பரம் |
| தர்மபுரி | தகடூர் |
| தவத்துறை | லால்குடி |
| திண்டிவனம் | புளியங்காடு |
| திண்டீஸ்வரம் | திண்டுக்கல் |

SHANKAR IAS ACADEMY

88. **விடை : C**

**பூர்வ ஆஷாடம்** (வடசொல்) என்பது தமிழின் பூராடம் நட்சத்திரத்தைக் குறிக்கும். இந்த நட்சத்திரத்தில் பௌர்ணமி வரும் மாதம் ஆஷாடம் (ஆடி) எனப்படும். எனவே, புரட்டாசி என்பது தவறானது (புரட்டாசி மாதத்திற்குரிய வடசொல் விண்மீன் பெயர் பூர்வ ப்ரோஷ்டபதம் / பூரட்டாதி ஆகும்).

89. **விடை : B**

**பொருள் விளக்கம்:**

- **கழை** - மூங்கில் (மூங்கில் நிறைந்த காடு)
- **கலை (மான்)** - ஆண் மான் (கலை மான்)
- **களை** - பயிர்களுக்கு இடையே வளரும் வேண்டாத புல்/செடி (வயலில் இருந்த களைகள்)

  இந்த சொற்பொருள்களின்படி, "மூங்கில் (கழை) நிறைந்த காட்டில் மேய்ந்த ஆண் மான் (கலை மான்), வயலில் இருந்த வேண்டாத புற்களை (களைகளை) உண்டது" என்ற பொருள் தரும்

90. **விடை : B**

நன்னூலின் படி, பதிகம் என்பது ஒரு நூலின் பொதுப் பாயிர மும் சிறப்புப் பாயிர மும் ஆகிய பலவகைப் பொருள்களையும் தொகுத்துச் சொல்வதாகும்.

"பொதுவும் சிறப்பும் ஆய இரு பாயிரமும்
ஏற்ப உரைப்பது பதிகம் ஆகும்" என்பது நன்னூல் நூற்பா

91. **விடை : B**

Soft – மென்மையான
Weak – பலவீனமான
Screw – திருகாணி
Soap – வழுலை

92. **விடை : A**

**விலங்கு இளமை பெயர் மரபு:**

1. கோழி -- குஞ்சு
2. நரி -- குட்டி
3. அணில் -- பிள்ளை
4. கீரி -- பிள்ளை
5. பெற்றம் -- கன்று
6. நாய் -- குட்டி
7. புலி -- பறழ்
8. சிங்கம் - போதகம்
9. யானை -- கன்று
10. குதிரை -- குட்டி

SHANKAR IAS ACADEMY

93. **விடை : C**

புவியியல் துறையில் ‘Archipelago’ என்ற சொல்லிற்கு இணையான தமிழ்க் கலைச்சொல் (C) தீவுக்கூட்டம் ஆகும்.

**பிற சொற்களுக்கான ஆங்கிலக் கலைச்சொற்கள்:**

- நிலச்சந்தி - Isthmus
- நேர மண்டலம் - Time Zone
- புவிச்சரிவு - Earth slope / Landslide

94. **விடை : A**

- மன் (குறில்): 'மன்' என்ற சொல்லுக்கு தலைவன், அரசன், நிலைபெற்றது போன்ற பொருள்கள் உண்டு.
- மான் (நெடில்): 'மான்' என்பது ஒரு விலங்கு (Deer) வகையைக் குறிக்கும்.

95. **விடை : B**

96. **விடை : C**

97. **விடை : A**

உண்பொழுது நீராடி யுண்டலும் என்பெறினும்
பால்பற்றிச் சொல்லா விடுதலும்- தோல்வற்றிச்
சாயினும் சான்றாண்மை குன்றாமை இம்மூன்றும்
தூஉய மென்பார் தொழில்.

– திரிகடுகம்.

98. **விடை : B**

(B) அறிவற்றவர் ஆரவாரம் செய்வர்.

**விளக்கம்:**

- குறை குடம் ததும்பும்: பாதி அளவு மட்டுமே நீர் நிரம்பிய குடத்தை எடுத்துச் செல்லும்போது அது ததும்பி வழியும் (சத்தம் போடும்). அதுபோல, அறிவில் குறைந்தவர்களே (அறிவற்றவர்களே) தங்களுக்கு எல்லாம் தெரியும் என்று அதிகமாக ஆரவாரம் செய்வார்கள் என்பதை இப்பழமொழி உணர்த்துகிறது

99. **விடை : A**

- ➢ சோழநாடே செந்தமிழ் நாடு என்கிறார் - இளம்பூரணர்.
- ➢ பாண்டிய நாடே செந்தமிழ்நாடு என்கிறார் - தேவநேயப் பாவாணர்.
- ➢ வடவேங்கடம் தென்குமரி என்ற எல்லைக்குட்பட்ட நிலமே செந்தமிழ்நாடு என்கிறார் - பாரதியார்.

100. **விடை : C**

'ஒவ்வொரு' என்னும் சொல் ஒருமையைக் குறிக்கும். எனவே, அது வரும்போது தொடரும் பெயர்ச்சொல்லும் (மாணவன்), முடிக்கும் வினைமுற்றுகளும் (எழுதினான்) ஒருமையிலேயே அமைய வேண்டும்

*********

SHANKAR IAS ACADEMY